பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
நல்லூர் கொநூலகம்.

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 12 சனிக்கிழமை (28-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 224

# பரந்தன் சண்டை ஆரம்பித்த பின் இடம்பெற்ற மிகப்பெரும் மோதல்!

## இரு முனைகளில் ஒரே சமயத்தில் தாக்குதல்கள்!!

கொழும்பு, செப்; 28

பரந்தன் பகுதியில் கடந்த வியாழக்கிழமை காலை விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச படையினருக்கும் இடையில் நடைபெற்ற சண்டை "உண்மை வெற்றி" இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற பெரும் மோதல் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முதல் நாளான புதன்கிழமை அரசாங்கப் படைகள் முரசுமோட்டையில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறி முக்கிய சந்தி ஒன்றைக் கைப்பற்றி இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

வியாழன் காலை 5.00 மணியளவில் விடுதலைப் புலிகள் தமது மனித அலைகள் தந்திரோபாயத்தைப் பயன் படுத்தி ஸ்ரீலங்காப் படையினரை மேற்குப் பகுதியில் இருந்தும் தெற்குப் பகுதியில் இருந்தும் ஒரே சமயத்தில் தாக்கினார்கள் என்றும் -

தெற்குப் பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஸ்ரீலங்காப் படையினர் வெற்றிகரமாக முறியடித்து விட்டனர் என்றும் —

ஆனால் மேற்குப் பகுதியில் இருந்து தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் படையினரின் பாதுகாப்பு அரண்களுக்குள் ஊடுருவி படையினருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தினர் என்றும் — தரைப் படையின் அறிக்கை கூறுவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

இந்த இரு முனைத் தாக்குதல்களின் போது 5 அதிகாரிகள் உட்பட 75 படையினர் மரணமடைந்ததாகவும் —

10 அதிகாரிகள் உட்பட 146 படையினர் காயம் அடைந்ததாகவும் நடவடிக்கைத் தலைமையகம் கூறியது.

இந்த தாக்குதல்களின் போது 450க்கு மேற்பட்ட புலிகள் இறந்ததாகவும் 300பேர் வரை காயம் அடைந்ததாகவும் அது மேலும் தெரிவித்தது.

கொல்லப்பட்ட புலிகளில் 138 பேரின் சடலங்களை ஒப்படைப்பது குறித்து செஞ்சிலுவைச் சர்வதேச குழுவுடன் இராணுவம் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இரு நாள் சண்டைகளில் இரு தரப்பிலும் 500 பேர் வரை இறந்ததாகவும் — இதில் விடுதலைப் புலிகள் 325 பேர் என்றும் ஸ்ரீலங்கா அரச படைகள் 172 பேர் என்றும் கொழும்பில் இராணுவ அதிகாரி தெரிவித்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

இதற்கிடையில் புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் நேற்று பி பி சிக்கு பேட்டி அளிக்கையில், வியாழக்கிழமை காலை நடத்தப்பட்ட தாக்குதலில் இறந்த விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை 35 மட்டுமே என்று தெரிவித்தார். (இ-3-10)

# அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க பிரிட்டன் தயார்!

## உதவி அமைச்சர் லிம் தகவல்

கொழும்பு, செப்ரெம்பர் 28

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு, மத்தியஸ்தம் வகிப்பதற்கு பிரிட்டன் விருப்பம் கொண்டுள்ளது.**

**கொழும்புக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார உதவி அமைச்சர் டாக்டர் லிம் பொ(F)க்ஸ் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.**

கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மத்தியஸ்தம் வகிக்குமாறு கேட்டுக் கொண்டால் —

13 வருடங்களாக நடைபெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்குப் பிரிட்டன் மூன்றாவது தரப்பாக நின்று உதவும் — என்று டாக்டர் லிம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாவைக் கைது செய்வது எளிதல்ல; அது மிக நெருக்கடியான விடயம்

## நியூயோர்க்கில் அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 28

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைப் பிடிப்பது என்பது எளிதான காரியம் அல்ல. அது மிகவும் நெருக்கடியான விடயம் என நினைக்கிறேன்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நியூயோர்க்கில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ. நா. வின் 51 ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் கதிர்காமர் நியூயோர்க் வந்திருந்தார்.

நியூயோர்க்கில் தெற்காசிய பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை இலங்கைப் படையினர் கைது செய்தால் மாத்திரமே முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பான விசாரணைக்கு அவரை உட்படுத்துவதற்காக இந்தியாவுக்கு நாடு கடத்துவது குறித்து பரிசீலிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் அமைச்சர் கதிர்காமர் உரை நிகழ்த்துகையில், உலகில் உள்ள பணக்கார நாடுகளிடமிருந்து நிதி, ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கின்றன — என்றார்.

இந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களாலேயே இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (இ-3-10)

## வவுனியாவில் மூவர் மர்மக்கொலை

கொழும்பு, செப். 28

திருகோணமலையில் இருந்து வான் ஒன்றில் வவுனியா வந்த மூவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது சடலங்கள் மன்னார் — வவுனியா வீதியில் உள்ள ராஜேந்திரம் குளம் என்னுமிடத்தில் இருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

கொலை செய்யப்பட்டவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விமான தபால் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான துரித விமான தபால் சேவை நேற்று ஆரம்பமானது.

நேற்று கொழும்பில் இருந்து மூன்று தபால் பொதிகள் விமானம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

இங்கிருந்தும் 3 பொதிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன.

இந்த சேவை ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் நடைபெறும் என்றும்—

ஒருதடவையில் 50 கிலோ நிறையுடைய தபால் பொதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஓஷன் கரியர் மூலம் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், செப். 28

"ஓஷன் கரியர்" கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட 170 தபால்பொதிகளும் நேற்று யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இத்தபால்கள் தரம் பிரிக்கப்பட்டு இன்று முதல் விநியோகிக்கப்பட விருக்கின்றன. (இ-3)

## சலூன்களில் ஊழியர் கைது

கொழும்பு, செப். 28

தெஹிவளை குண்டு வெடிப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து கொழும்பு, வத்தளை, நீர்கொழும்பு பகுதிகளில் உள்ள சிகை அலங்கார நிலையங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாஹோவில் விதை நெல்

யாழ்ப்பாணம், செப். 28

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான விதை நெல் அடுத்த வாரத்தில் 'மாஹோ' கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான 35 ஆயிரம் புசல் விதை நெல்லை கொள்வனவு செய்ய உலக

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், கோண்டாவில்.

**SPOKEN ENGLISH**
**With**
**GRAMMAR**

புதிய பிரிவு ஆரம்பம்:

ஆசிரியர் திரு. **BRITTO**

காலம்: **01 – 10 - 96** (செவ்வாய் 7. 30 a. m)

சிங்கள வகுப்புகள் ( பேச, எழுத, வாசிக்க )

ஆரம்பம்: **01 - 10 - 96** ( செவ்வாய் 4. 00 p. m)

(42885)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பட்டப்பின் கல்வித்தகைமை,
பகுதி நேரம். I & II / முழு நேரம்

## விசேட பரீட்சை - 1994

2- 10- 1996 இல் ஆரம்பமாகவிருந்த மேற்குறித்த விசேட பரீட்சை காலவரையறையின்றிப் பிற்போடப் பட்டுள்ளது. புதிய திகதி பத்திரிகையில் விளம்பரப்படுத் தப்படும்.

பதிவாளர்.

(சி- 3195)


## கண்ணீர் அஞ்சலி

உரும்பராய் வடக்கு
கணேசா சன சமூக நிலையத்தின் முன்னாள் தலைவர்

### திரு சின்னத்தம்பி இராசரத்தினம்

(Retired Chief Station Master) அவர்களும்,
இதே நிலையத்தில் கணக்காளராகவும், போஷகராகவும் பணிபுரிந்த கவிஞர்

### செல்லப்பா ஐயாத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர், உரும்பராய் இந்துக்கல்லூரி)

அவர்களும் அண்மையில் அமரத்துவமடைந்துள்ளனர்.

இவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது நிலையம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது

நிர்வாக சபையினர்
கணேசா சன சமூக நிலையம்.

உரும்பராய் வடக்கு,
28 - 09 - 96

(42887)


## பயிற்சிப் பரீட்சைகள்

# ஆண்டு - 5 புலமைப்பரிசில் - '97

(தற்பொழுது ஆண்டு - 4 படிப்பவர்களுக்காக)

முதலாவது பரீட்சை — **29-09-96**

### ஆண்டு - 9 கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ்

பரீட்சைக்கான பயிற்சிப்பரீட்சை I – **29-09-96**

**3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L** மாதாந்தப்பரீட்சை — செப்டெம்பர்

★ மர்ணவர் போக்குவரத்து நலன் கருதி

| | | | |
|---|---|---|---|
| BOND | — யாழ்ப்பாணம் | தனஞ்செயன் | — கல்வியங்காடு |
| யூனிவேர்சல் | — கந்தர்மடம் | மணி | — நாச்சிமார் கோயிலடி |
| அறிவொளி | — நல்லூர் | | |
| EXPRESS | — இருபாலை | ஸ்ரீபதி | — கொக்குவில் |
| IDEAL | — நீர்வேலி | ஈசன் | — கோண்டாவில் |
| குருபரன் | — புத்தூர் | கலைஅரங்கம் | — இணுவில் |
| I. A. S. | — ஆவரங்கால் | VINYLS | — சுன்னாகம் |
| LUCKY | — அச்சுவேலி | வள்ளுவர் | — உரும்பராய் |
| சதாபொண்ஸ் | — மாலுசந்தி | தர்மா | — உடுவில் |
| P. E. C. | — புலோலி | LUKKY | — கட்டுடை |
| செல்வி கீதா | — நாச்சிமார் கோயிலடி | பாரதி | — சித்தன்கேணி |
| | | றெமிங்ரன் | — சுழிபுரம் |
| சரஸ்வதி | — நுணாவில் | BITSMANS | — மானிப்பாய் |
| வளர்மதி | — மட்டுவில் | JAFFNA TUITION | — ஆறுகால்மடம் |
| சற்குணராஜா | — வியாபாரிமூலை | கணேஸ் | — எழுதுமட்டுவாழ் |
| BRILLIANT | — சாவகச்சேரி | CRYSTAL | — திக்கம் |
| TALENT | — வட்டுக்கோட்டை | CAMBRIDGE | — நவிண்டில் |
| DALTON | — துன்னாலை | மது | — இருபாலை |

ஆகிய கல்வி நிறுவனங்களிலும் இப் பரீட்சை நடைபெறும்.

நேரடியாக இப்பரீட்சைகளுக்குத் தோற்ற வசதி, நேரம் இல்லாதவர்கள் - தபால் மூலம் எம்முடன் தொடர்பு கொண்டால் வீட்டிலிருந்தபடியே எமது எல்லாப் பரீட்சைகளுக்கும் தோற்றலாம்.

மேலதிக விவரங்களுக்கு: பதிவாளர்

பரீட்சைப் பகுதி - **BOND INSTITUTES**

தபால் பெட்டி: 140, யாழ்ப்பாணம்.


## வெற்றிலை வாழை செய்கை ஊக்குவிப்பு

வலி.தென்மேற்கு,செப். 28

யாழ் குடாநாட்டில் வெற்றிலை, வாழை உற்பத்தியை ஊக்குவிக்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது

வலிகாமத்தில் இருந்து மக்கள் பெரும் அளவில் இடம் பெயர்ந்த காரணத்தால் இந்த இரு பயிர்களும் பெரும் அளவில் அழிந்து போனது தெரிந்ததே.

தற்போது வெற்றிலைக்கும், வாழைப்பழத்துக்கும் குடாநாட்டில் பெரும் அளவில் தட்டுப்பாடு நிலவுகிறது.

(இ-145)

## புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் மீண்டும் ஆரம்பம்

வலி, தென், மேற்கு,செப். 28

புனர்வாழ்வு —புனரமைப்பு அமைச்சின், மீளக் குடியமர்ந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மீண்டும் இதன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன (இ-145)

## இந்திய மீனவர் 13பேர் விடுவிப்பு

சென்னை, செப். 28

இராமேஸ்வரம் கரைக்கு அப்பால் சடந்த ஒகஸ்ட் மாதம் சர்வதேசக் கடல் எல்லையில் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு 50 நாள்களாகச் சிறை வைக்கப்பட்டிருந்த 13 இந்திய மீனவர்கள் நேற்று விடுவிக்கப் பட்டார்கள்.

இன்று இவர்கள் கச்சதீவில் இந்திய கடலோர காவற் படையினரிடம் ஒப்படைக்கப் படுவார்கள்.

இந்த மீனவர்களை கைது செய்த போது தாங்கள் கைப்பற்றிய 3 படகுகளையும் இந்திய கடலோரக் காவற் படையினரிடம் இலங்கைக் கடற்படையினர் ஒப்படைப்பார்கள் என்று தெரிவிக்கப் பட்டது. (இ-4)

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி திருநாவுக்கரசு

ஏழாலை மேற்கைச் சேர்ந்த இளையதம்பி திருநாவுக்கரசு 26 - 09 - 96 அன்று காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், தயாபரன் (இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்), தயாகுணன், தயானந்தன் (பிரான்ஸ்), தயாளதேவன் (சுவிஸ்), உமாபாலன் (ஜேர்மனி), உமாநந்தன் (பிரான்ஸ்), இன்பவதி (கனடா), தயாநிதி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தந்தையும், புவனேஸ்வரி, ஜெயலெட்சுமி (ஆசிரியை, ஏழாலை மகாவித்தியாலயம்), புஸ்பவதி, யோகேஸ்வரன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கீதா, கோகுலவர்ணன், அஜந்தன், அனுஷன், சுரேன், வினுஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27-09-96) பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
திருமதி பாக்கியம் திருநாவுக்கரசு

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(42880)

## வல்லிபுரம் பொன்னுச்சாமி

(இளைப்பாறிய ஆசிரியர்,தெல்லிப்பழை யூனியன்கல்லூரி)

ஏழாலை வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் பொன்னுச்சாமி 26 - 09 - 96 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி கதிர்காமு தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் (இளைப்பாறிய ஆசிரியை, ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்), அன்புக் கணவரும், சத்தியவதனியின் அன்புத் தந்தையும், சிறீசதாநந்த நாயகம் (பொறியியலாளர், ஓமான்) அவர்களின் மாமனாரும், டெனோஜன், சர்மி, கரிகரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் இன்று (28-09-96) சனிக்கிழமை நடைபெறுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
க. இராசேந்திரம்
(மைத்துனர்)

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(42891)

## திருமதி சிவராசா இராசமலர்

சங்கானை பிரான்பற்றைப் பிறப்பிடமாகவும், செல்வர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா இராசமலர் 27 - 9 - 96 அன்று காலமானார்.

இவர் சிவராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி — சோதியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சங்கரப்பிள்ளை — செல்லம்மாவின் அன்பு மருமகளும், மகாசுதன், மகாதேவி, பிரதீபன், பிரதீப், ஜெகதீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயக்குமார் (கல்வியங்காடு ரயர் வேக்), சந்திரகுமார் (மானிப்பாய் ரயர் வேக்), உதயகுமார், ஜெயசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி— நாகேஸ்வரி, கந்தையா — மகேஸ்வரி, சிவராசா — யோகேஸ்வரி (ஜேர்மனி), நியூட்டன், தயா (ஜேர்மனி), புவனேஸ்வரி, சரஸ்வதி, நல்லநாயகி, சூரியகலா, லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ரயர் கடை ஜெயக்குமார் இல்லத்தில் நாளை (29 - 9 - 96) ஞாயிறு காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
குமார் (ரயர் கடை)
(சகோதரன்)

82/1 செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(42893)

## திருமதி இராமநாதன் மனோன்மணி

மாவடி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி இராமநாதன் மனோன்மணி 25-09-96 இல் காலமானார்.

அன்னார் க. இராமநாதனின் (ஓய்வு பெற்ற நிர்வாக சேவையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நவரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், Dr. திருமதி சவுந்தரராணி வயிரவநாதன்(கனடா), மனோகரன் (பொறியியலாளர், கனடா)ஆகியோரின் அன்புத் தாயும், வயிரவநாதன் (பொறியியலாளர், கனடா), யோகேஸ்வரி (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கனடாவைச் சேர்ந்த ரஜனி, இளங்குமரன்,மீரா,ரவி, வாணி ஆகியோரின் பேர்த்தியாரும், சண்முகம், இராமநாதன், சரஸ்வதி, சிவபாக்கியம், மகேஸ்வரி முருகேசு,வயிரவநாதன், இராசமணி, தியாகராசா, செல்வரத்தினம், கருணாகரன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-09-96 அன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
இராமநாதன்
(கணவர்)

மாவடி, வட்டுக்கோட்டை.

(42892)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் இளா நூலகம்.

# தலிபான் போராளிகளிடம் தலைநகர் காபூல் வீழ்ச்சி

## முன்னாள் ஜனாதிபதி நஜிபுல்லா தூக்கில்

காபூல், செப். 28
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலை பாகிஸ்தான் ஆதரவு தலிபான் போராளிகள் நேற்று அதிகாலை கைப்பற்றினர். ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி டொக்டர் நஜிபுல்லா தலிபான் போராளிகளினால் பிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். ரஷ்ய ஆதரவு நஜிபுல்லாவின் சடலமும் அவரது சகோதரர் சாகுல் அஹ்ம·] சாயையின் சடலமும் காபூலில் உள்ள ஜனாதிபதி மாளிகையின் நுழைவாயிலில் உள்ள போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கம்பத்தில் தொங்கவிடப்பட்டிருந்தன.

ஐ.நாவின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசு, நாலரை ஆண்டுகளுக்கு முன்னர் கவிழ்கப்பட்டதை அடுத்து நஜிபுல்லா காபூலில் உள்ள ஐ.நா. தூதரகக் கட்டடத்தில் தஞ்சம் அடைந்திருந்தார்.

தலிபான் போராளிகள் அவரை வெளியே இழுத்து வந்து வீதியில் வைத்து தூக்கிலிட்டனர்.

தலைநகர் காபூலில் உள்ள முக்கிய கட்டடங்கள் தலிபான் போராளிகள் வசம் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஜனாதிபதி ரபானியும் பிரதமர் ஹெக்மத்தயாரும் தலைமறைவாகி விட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் படைகள் காபூலுக்கு வடக்கே சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காபூலில் உள்ள ஒரே ஒரு விமான நிலையமும் தலிபான் போராளிகளிடம் சிக்கி உள்ளது.

தலிபான்போராளிகள் உடனடியாக ஆப்கானிஸ்தானில் ஷரியச் சட்டத்தைப் பிரகடனம் செய்துள்ளனர்.


## கணிதமேதை ஐன்ஸ்டீனின் கடிதங்கள் ஏலவிற்பனை

லண்டன் செப் 28
கணிதமேதை அல்பிரட் ஐன்ஸ்டீனின் தனிப்பட்ட 400 கடிதங்கள் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி ஏலத்தில் விற்கப்படும் என அவரது சொத்துக்களைப் பராமரித்து வரும் 'பிறிஸ்ரீச்' நிறுவனம் நேற்று முன்தினம் அறிவித்தது.

கடிதங்கள் சுமார் ஏழரைக் கோடி ரூபாவுக்கு விற்பனையாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐன்ஸ்டீன் மாணவராக இருந்த போது 1897 முதல் 1903 வரை அவரது காதலிக்கு எழுதிய 53 காதல் கடிதங்கள் மிக உயர்ந்த விலைக்கு விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐன்ஸ்டீன் கணித மேதை ஆவதற்கு அவரது காதலியின் உந்துதலும், உற்சாக



மூட்டலும் முக்கிய காரணமாக இருந்தன. (இ-10)

**உலக அரங்கில்**

## பொலீஸாருடன் மோதல்; பிரபல கேடி சுட்டுக்கொலை

### சென்னையில் சம்பவம்

சென்னை செப்.28
சென்னையில் தொழில் அதிபர் ஒருவரை மிரட்டிப் பணம் பறிக்க முயன்ற பிரபல கேடியான கபிலனும் அவரது கூட்டாளியும் காவல் துறையினருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

சென்னை நகரில் பரபரப்பான அடையாறுப் பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை காரில் இருந்தபடி கபிலன் தொழில் அதிபரிடம் பணத்தைக் கேட்டபோதே, ஏற்கனவே சாதாரண உடையில் நிலைமையை அவதானித்துக் கொண்டிருந்த காவல் துறையினர் கபிலனது காரைச் சுற்றி வளைத்து அவரைப் பிடிக்க முற்பட்டனர் என காவல்துறை அதிகாரி தெரிவித்தார்.

காவல்துறையினரின் 3 கார்கள் தனது காருக்கு வழிவிடாமல் முன்னால் மறித்துக் கொண்டு வருவதை உணர்ந்த கபிலன் தனது காரை வேறு பக்கமாகத் திருப்பிச் செல்ல முயன்றார். அப்போது அவரின் காரின் பின்பகுதி தொலைபேசிக் கம்பத்தில் மோதியது. காவல் துறையினரின் காரும் கபிலனின் காரை இடித்தவாறு வந்து நின்றது.

இனித் தப்பிக்க முடியாது என்பதை அறிந்த கபிலனும் கூட்டாளியும் துப்பாக்கியால் பொலிசாரை நோக்கி சரமாரியாக சுட்டனர்.

இந்த நேரத்தில் அந்த வழியாக சென்ற ஒருவர் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து மரணமடைந்தார்.

பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கபிலன் அந்த இடத்திலேயே மரணமடைந்தார். குண்டு பாய்ந்த கூட்டாளி அருகிலுள்ள மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு பின்னர் உயிரிழந்தார்.

இந்த மோதலில் 7 காவல் துறையினர் காயமடைந்தார்கள்.

(இ-10)

## கருச் சிதைவுக்கு ஆதரவாக கருத்து

லண்டன்,செப் 28
''தாய்மை அடைந்துள்ள பெண்கள் கருச்சிதைவு செய்து கொள்ள விரும்பினால் வயிற்றில் இருக்கும் குழந்தை வேதனை அனுபவிக்கும் என அஞ்சத் தேவையில்லை.''

இப்படி லண்டனிலுள்ள மருத்துவ ஆய்வாளர்களின் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

கருச் சிதைவுக்கு எதிராக வாதமிடும் குழுக்கள் குழந்தையானது வேதனையுடன் சாகிறது என்று முன்வைக்கும் வாதத்துக்கு ஆய்வு அடிப்படையிலான நிரூபணங்கள் எதுவும் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-10)

# மனித உரிமை செயலணியின் கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது

கொழும்பு, செப். 28
யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் செயலணிக் குழுவின் பணிமனை ஒன்றைத் திறப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை எதிர் பார்த்துள்ளதாக மனித உரிமைகள் செயலணிக் குழுவின் தலைவர் சி. ரி. ஜான்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இப்பணிமனையைத் திறப்பதற்கான அவசர தேவை உருவாகியுள்ளதாகவும்—

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி. சில்வாவுக்கு இது பற்றி தெரிவித்துள்ளதுடன் அவரது ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும்—

ஜான்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் பிரதேசம். எங்களுக்குக் கிடைத்துள்ள அனைத்து முறைப்பாடுகள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட சகலரது உடனடிக் கவனத்தையும் ஈர்க்க வேண்டிய தேவை உள்ளது''—எனவும் ஜான்ஸ் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் செயலணிக் குழுவின் பணிமனையைத் திறப்பதற்கான ஒழுங்குகள் பற்றி நாங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு அரசஅதிகாரிகளுடன்தொடர்பு கொண்டுள்ளோம். யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்வு இடம் பெற்ற பின்னர் அங்கு கைது செய்யப்பட்டு தற்போது மகஸீன்சிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்டுள்ள 94 இளைஞர்கள் பற்றியஅறிக்கை எமக்குக் கிடைத்துள்ளது என ஜான்ஸ் சொன்னார்.

## லயன்ஸ் கழகம் அன்பளிப்பு

தென்மராட்சி செப் 28
தென்மராட்சிப் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கால் ஊனமுற்ற இருவருக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் முச்சக்கர வண்டிகளையும் கண் பார்வை குறைந்த 15 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளையும் அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

நாளை ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் உள்ள கழக அலுவலகத்தில் இவை வழங்கப்படும்.

கழகத் தலைவர் லயன் இ. கமலநாதன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் யாழ் பிராந்திய லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-117)

### துர்நாற்றம்

தென்மராட்சி செப். 26
கொடிகாமம் சந்தைப் பகுதியில் தற்போது இறைச்சிக்கு அறுக்கும் மாடுகளின் கழிவுகள் வெட்டித் தாக்கப்படுவதால் துர்நாற்றம் வீசுகிறது.
(இ-117)

## அரசியல் வன்செயல்களை தவிர்க்க பிரதமர் கோரிக்கை

கொழும்பு, செப். 27
அரசியல் வன்செயல்களையும் சட்டவிரோதச் செயல்களையும் சகல தரப்பினரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அவற்றில் எந்த வகையிலும் ஈடுபடக்கூடாது

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமரர் பண்டாரநாயக்காவின் நினைவு தினத்தையொட்டி விடுத்த செய்தியிலேயே பிரதமர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அரசியல் தன்மை மிக்கவை போன்ற சில வன்செயல்கள் ஆரம்பித்திருப்பதை ஆழ்ந்த கவலையுடனும் அக்கறையுடனும் நான் அவதானிக்கிறேன்.

இவற்றில் ஈடுபடும் மக்கள் எந்தத் தரப்பைச் சேர்ந்தவர்களாயினும் எந்தவித வன்செயல் நடவடிக்கையிலும் சட்டவிரோத நடவடிக்கையிலும் பங்கு கொள்ளாமல் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் தமது கடமைகளைப் பாரபட்சமற்ற முறையில் மேற்கொள்ள வேண்டும்.

எவ்வகை வன்செயலையும்' காடைத்தனத்தையும் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன் என்று உள்ளது. (இ-3)

# இடம் பெயர்ந்த அரச ஊழியர்களை யாழ்ப்பாணம் திரும்புமாறு உத்தரவு

வவுனியா, செப். 28
யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள அரசாங்க ஊழியர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து கிடைத்துள்ள இந்த உத்தரவை வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர்கள் சிலர் வவுனியாவில் தற்காலிகமாக வேலை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கப்பல் சேவை தற்போது நடைபெறுவதால், அவர்களைச்சொந்தஇடங்களுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

வட பகுதி செல்ல பதிவு செய்துள்ள அரசாங்க ஊழியர்களை ஒன்றுவிட்ட ஒரு தினம் நூறு பேர் வீதம் வவுனியாவில் இருந்து திருமலைக்கு ரயிலில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

### வெங்காயம் விலை வீழ்ச்சி

உள்ளூரில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

மழையை அடுத்து வெங்காயம் பெருமளவில் அறுவடை செய்யப்பட்டதால் சந்தைகளில் ஒரு கிலோ வெங்காயம் 10 ரூபாவுக்கு குறைவான விலையில் விற்கப்படுகின்றது. (இ-11)

## தப்பியோடிய படையினரை தேடி கிழக்கில் வேட்டை

மட்டக்களப்பு, செப். 28
கடமையிலிருந்து தலைமறைவாகிச் சென்ற இராணுவத்தினரைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது

மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் திடீர் தேடுதல்களை படையினர் நடத்தி வருகின்றனர்.

இராணுவத்தில் கடமையாற்றிவந்த இப்பகுதி முஸ்லிம் இளைஞர்கள் பலர் தலைமறைவாகிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூரில் மாத்திரம் பத்துக்கும் மேற்பட்டவர்கள் கைதாகியுள்ளனர்.

இவர்களுக்கு முதலில் இராணுவச்சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுமென்றும்-

அதன் பின்னர் அவர்கள் கடமையில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வாழைச்சேனை, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய இடங்களில் இவ்வாறு தேடுதல்கள் நடந்ததாகவும் —

தப்பியோடிய படையினரின் வீடுகள் திடீரென சுற்றி வளைக்கப்படுவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள், மின்சாரப் பொருள்கள், T. V, டெக், அன்ரனா, தையல் மெசின்கள், ஸ்ரில்அலுமாரி, தறப்பாள், ரைப்றைற்றர் (ஆங்கிலம்), றேடியோ, செரமிக், கிளாஸ், பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் பல தரப்பட்ட பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு இல: 226 (104), பிரதான வீதி, யாழ்ப்பாணம். (42848)

68 ஆம், 70 ஆம், 72 ஆம், ஆண்டின் ''ஆனந்தவிகடன்'' புத்தகம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. இராசையா, ஸ்ரேசன் றோட், கோண்டாவில். (42878)

கடைப்பாவனைக்கு ஏற்ற மரத்தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. இல. 342, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (42879)

முச்சக்கர வண்டி சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. நன்னித்தம்பி, இல. 62/2 யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (42856)

### பாலர் ஆசிரியராக

தபால் வழியில் பாலர் ஆசிரியர் பயிற்சி — க. பொ. த (சா/த) கடைசித் தகைமையாகும். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: திரு. வீ. கே. கந்தசாமி, 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில்கிழக்கு, கொக்குவில். (42437)

### O/L MATHS

30 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் சகல Section களும் Portion களும் நிறைவேற்றப்பட்டு Secton and Portion Rivisson உடன் Past Papers Practice உம் அளிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (42869)

## பொம்மை வெளி: சங்கிலி மீட்பு

யாழ்ப்பாணம், செப். 28

பொம்மை வெளிப் பகுதியில் காணாமற்போன தங்கச் சங்கிலி கிராம சேவையாளரின் விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்டது

பொம்மை வெளிப் பகுதியைச் சேர்ந்த இரஞ்சிதமலர் என்பவரின் இரண்டரைப் பவுண் சங்கிலி காணாமற் போய்விட்டதாக கிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது குறித்து அந்தப்பகுதி கிராம சேவையாளர் செல்வி எஸ்.ரி. சகுந்தலாதேவி மேற்கொண்ட விசாரணையின் போது சங்கிலி மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-3-100)

## கருத்தரங்கு

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில், ஜி. சீ. ஈ (உயர்தர) வகுப்பில் நாடகமும் அரங்கியலும் கற்கின்ற மாணவருக்கு பயன்படும் வகையில் அமைந்த தொரு கல்விசார் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணி முதல் 6 மணி வரை நடைபெறவிருக்கிறது.

மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறும் இக் கருத்தரங்கில் திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் கருத்துரை வழங்குவார். (இ-51-111)

## புத்தூர்- மட்டுவில் வீதி பாவனைக்கு

அச்சுவேலி, செப். 28

புத்தூர் - மட்டுவில் வீதி பொது மக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. (இ-11)

---

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### இயேசுசகாயம் அருளானந்தம்

யாழ் பல்கலைக்கழக தாவரவியல் துறையைச்சேர்ந்த
திரு. அ. தவரஞ்சித்தின் தகப்பனார்
அமரர் இயேசுசகாயம் அருளானந்தம்
அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு
மிகவும் அதிர்ச்சியடைந்தோம்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாவரவியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(42883)

---

## கண்ணீர் அஞ்சலி

''எமது கழகத்தின் ஆரம்பகால உறுப்பினர்''
அமரர்

### இயேசுசகாயம் அருளானந்தம்

(இளைப்பாறிய மாகாண அத்தியட்சகர் அஞ்சல் திணைக்களம்)

அவர்களின் மரண அறிவித்தலை உதயன் பத்திரிகையில் கண்ணுற்று மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— அஞ்சல் தொலைத்தொடர்பு
இளைப்பாறிய சேவையாளர்
நலன்புரிக் கழகம்.

(42882)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 05 — 07 — 1917



உதிர்வு: 10 — 10 — 1995

### அமரர் சின்னத்தம்பி இராசையா

திதி: 28—09—1996

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை பண்போடும், அறிவோடும், பாசத்தோடும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(42867)

---

## 90-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 24 — 07 — 1932



இறப்பு: 01 — 07 — 1996

### அமரர் துரையப்பா கிருஸ்ணசாமி

(முன்னாள் லக்ஷ்மி பவான் உரிமையாளர், பருத்தித்துறை.)

திங்கள் மூன்று சென்றதையா
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
நாங்கள் அன்று அறிந்தோமா
உங்கள் நிழலின்றி வாடப் போகிறோமென்று
எங்கள் காலம் முடிந்த பின்னும் உங்கள் நினைவுகள்
இத்தரணியில் தொடருமையா!

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''லக்ஷ்மி பவான்''
2-ம் குறுக்குத்தெரு
பருத்தித்துறை

(42881)

---

## விக்னா கல்வி நிறுவனம்

## O/L DAY & EVENING பிரிவு II

### மீட்டல் வினா விடை

(PAPER CLASS)

ஆரம்பம்: **01 - 10 - 1996**

ஆண்டு 10, 9, 8, 7, 6 வகுப்புகள்
நடைபெறுகின்றன.

மு.கு: அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(42873)

---

## தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

## விசேட பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தை எதிர்வரும் **30-09-96** திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு (இலங்கை நேரப்படி) கூட்டுறவு விதி 18 (i)ன் கீழ் எனது தலைமையில் கூட்டுகின்றேன். இக்கூட்டம் வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

தயவுசெய்து தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தின் பொதுக்கூட்டப் பிரதிநிதிகளை சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்
2. தலைவர் உரை
3. இயக்குநர் சபை உறுப்பினர் தெரிவு
4. நன்றியுரை

நா. வேதநாயகன்
பதில் பிரதேச செயலரும்
பிரதிக் கூட்டுறவு ஆணையாளரும்
வலி- வடக்கு.

26-9-96,
மல்லாகம்.

(சி-3190)

---

## SECOND DEATH ANNIVERSARY

28 — 09 — 96



### M. THAMBITHURAI

( Rtd. General Secretary Y. M. C. A Jaffna. )

God Loved him much and took him away
To be with Him in Heaven.

Affectionately remembered by
His Wife Thevi, Son Royce, daughter Anuja
Relations and friends.

Uduvil.

(42678)

---

## 45-ம் நாள் நினைவலைகள்

### திருமதி தவநாதன் வளர்மதி
### செல்வி தவநாதன் தௌசணியா

| | தோற்றம்: | மறைவு: |
|---|---|---|
| வளர்மதி | 11—04—1966 | 13—08—1996 |
| தௌசி | 22—03—1994 | 13—08—1996 |

திருமடல் பறந்துவர புதினம் நிறைந்து இருக்க
அகம் மலர்ந்து விரிப்போம் உம் திருமுகத்தை
முத்து முத்தான வாசகம் அள்ளி வீச
அன்பின் பாசம் பெருக்கெடுத்தோட
காவிய நாயகி போல் நீர் இருக்க பொம்மை போல்
தௌசியிருக்க எங்கள் விமர்சனம் அர்த்தமற்றது

பிரான்சில் பிறேக் அடித்து போகின்றேன் என்றீர்!
எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.
துடுக்குக் கூட பாரம் என்றோ கரையைத் தேடும்
ஓடம் ஆனீர்!

பயணம் முடியவில்லை - உம் இலக்கை
நீர் அடையவில்லை. தொடர்வோம் உம் பாதையில்
நாம் உம் இலக்கை அடைவோம் நிச்சயம்.

உங்களது ஆன்மாக்கள் சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி மாலினி - ஸ்ரீதரன்
உசன், இராமநாதன் ம. வி. ஆசிரியை

மா. ஸ்ரீதரன்,
மீசாலை மேற்கு,
சாவகச்சேரி.

(42874)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இதற்கும் அழுத்தமா?

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து உள்நாட்டு விவகாரங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்துவது இப்போது ஒரு வழமையான நடைமுறையாகி விட்டது.

நாட்டின் மனித உரிமைகளைப் பேணுவதில் அதிக அக்கறை காட்டப்படுகிறது என்பது தொடக்கம் அந்தந்த நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பு இயங்குவதைத் தடை செய்ய வேண்டும் அல்லது கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்பது வரையான பல விடயங்களை அரச தரப்பு வெளிநாட்டுத் தூதுவர்களிடம் தெரிவிக்கிறது; கேட்கிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் தமிழர்களின் எதிர்பார்ப்பு, அரசின் நிலைப்பாடு என்பன குறித்து தமிழ்க் கட்சிகள் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து எடுத்துச் சொல்லுகின்றன. நியாயமான தீர்வு ஒன்றைக் காணுமாறு அரசு மீது அழுத்தம் போடுமாறும் வேண்டுகின்றன.

அதே வகையில் — அதே வரிசையில் —

நாட்டில் தலைதூக்கும் அரசியல் வன்முறைகளை ஒடுக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பில் உள்ள முப்பது வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துக்கேட்டுள்ளது.

நாட்டில் அரசியல் வன்முறைகள் தலைதூக்குவது, சட்டம் ஒழுங்கு பேணப்படாமல் சீர்கெட்டுப் போவது என்பன உள்நாட்டுவிவகாரங்கள். ஆட்சியில் உள்ள அரசாங்கத்தால் கையாளப்பட வேண்டியன. இந்த விடயத்தில் வெளிநாடுகள் தலையிட்டு நாட்டில் அமைதியை நிலைநாட்ட அரசு மீது அழுத்தம் போடுமாறு கேட்பது பொருத்தமானதா?

அரசியல் வன்முறைகளை ஒடுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கமாட்டாது என்ற நம்பிக்கை இழந்த நிலையிலேயே, ஐக்கிய தேசியக் கட்சி வெளிநாடுகளின் உதவியை நாடியிருக்கின்றது என்று கருதலாம்.

எனினும்—

இதே கட்சி ஆட்சியில் இருந்த போதும் தென்னிலங்கையில் அரசியல் வன்முறைகள் தாராளமாகத் தலைவிரித்தாடின. அரசாங்கக் கட்சியே பல அரசியல் வன்முறைகளின் சூத்திரதாரியாக இருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. அப்போது வெளிநாடுகள் அழுத்தம் கொடுத்திருந்தால் அரசியல் வன்முறைகள் ஒடுக்கப்பட்டிருக்குமா?

அது ஒருபுறமிருக்க—

முழு நாட்டையுமே நெருக்கடிக்குள்ளாக்கி இருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாட்டு மத்தியஸ்தம் வேண்டாம் என்று இதே ஐக்கிய தேசியக்கட்சி முன்னர் அடியோடு நிராகரித்திருந்தது

இப்போது தனது அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் மீது அரசியல் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதும் வெளிநாடுகளின் உதவியை ''தலையீட்டை''க் கோருகின்றது!

தனக்குத் தனக்குத் தலைவலி வந்தால் தான் அதன் வேதனை தெரியும்! நீண்டகாலப் பிரச்சினையான இன விவகாரத்துக்கு 'வெளிநாடா, அது வேண்டவே வேண்டாம்' என்று வீராப்புப்பேசிவிட்டு—

இப்போது தமது கட்சிக்கு எதிரான வன்முறையைத் தடுக்க வெளிநாடுகளை நாடுகிறது ஐ. தே. கட்சி.

தனக்கு ஒரு நீதி, பிறருக்கு ஒரு நீதி, ஏனோ?

# வன்னியிலுள்ள யாழ். அரச ஊழியர் வவுனியா செல்வதற்கு ஏற்பாடுகள்

வவுனியா, செப். 28

யாழ் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் உள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றும் அரச ஊழியர்கள் யாழ்ப்பாணம் செல்ல வசதியாக —

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் இருந்து நொச்சிமோட்டை ஊடாக அவர்கள் வவுனியா வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்ட தகவலை வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஷ் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த அரச ஊழியர்கள் தாம் தற்போது தங்கியுள்ள மாவட்ட அரச அதிபரிடம் பெற்ற கடிதத்தை நொச்சிமோட்டை இராணுவ சோதனை நிலையத்தில் சமர்ப்பித்து வவுனியா வரலாம் என்றும்—

தமது குடும்பத்துடன் அவர்கள் இவ்வாறு வரமுடியும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## நெதர்லாந்து தூதர் யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், செப். 28

நெதர்லாந்து தூதுவர் எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு ஒருநாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

குடாநாட்டில் விவசாயத் திட்டங்களை பார்வையிடுவதுடன் சூழல் மாசடைதல் குறித்தும் அவர் ஆராய்வார்.

யாழ்ப்பாண அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதுடன், சில பகுதிகளில் விவசாயிகளுடனும் அவர் கலந்துரையாடவிருக்கிறார்.

யாழ். மாநகரசபைப் பகுதியில் வடிகால்கள் திருத்த 8 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை நெதர்லாந்து அரசு வழங்கியிருந்தது.

அத்துடன் குடாநாட்டு விவசாயிகளுக்கு தேவையான 250 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் அனுப்ப நெதர்லாந்து அரசு முன்வந்துள்ளது (இ-3)

## இணைப்புக் குழுவுக்கு அரசு ஆதரவு கோருகிறது

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

கொழும்பு, செப். 28

வடக்கு—கிழக்கு இணைப்புக்குழு செயற்படுவதற்கு அம்மாகாண மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சகல அரசியற் கட்சிகளினதும் ஒத்துழைப்பை அரசாங்கம் நாடியுள்ளது

ஜனாதிபதி செயலகம் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாணங்களின் இன்றைய நிலைமையைக் கருத்திற் கொள்ளும் போது, மாகாணங்களின் முகாமைத்துவமும், நிர்வாகமும் தீர்க்கமான முறையில் நடைபெறுவதற்கு இணைப்புக்குழு ஒன்றை நியமிப்பது அவசியமாகியுள்ளது என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த இணைப்புக்குழு முறை புதிய தொன்று அல்ல என்றும், ஏனைய மாகாணங்களிலும் இது செயற்படுவதாகவும் துறைமுகங்கள், கப்பல் துறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் இக்குழுவின் தலைவராக விளங்குவார் என்றும், வடக்கு — கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகா இணைத் தலைவராக இருப்பார் என்றும் இந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. (இ-10)

## தமிழ்ப் பாடசாலைகளுடன் தமிழிலேயே தொடர்பு

### கல்விப்பணிப்பாளருக்கு அறிவுறுத்து

தமிழ், முஸ்லிம் பாடசாலை அதிபர்களுடன் தமிழ்மொழி மூலமும் —

சிங்களப்பாடசாலை அதிபர்களுடன் சிங்கள மொழி மூலமும் — கல்விப் பணிப்பாளர்கள் தொடர்பு வைத்துக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார்.

மாகாண கல்வி அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்களுக்கான விசேட கூட்டத்தில் இதுபற்றி அவர் அறிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

தமிழும் சிங்களமும் ஆட்சி மொழியாக இருப்பதால், இம்மொழிகளை உறுதிப்படுத்த வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும்.

அதிகமான கல்விப்பணிப்பாளர்கள் ஆங்கில மொழியில் கடிதங்கள், குறிப்புக்களை அனுப்புகின்றனர். இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-3)

## தனியாரிடம் வாங்கிய நெல்; எதிர்பார்த்த பலன் இல்லை

வலிகாமம் தெற்கு, செப். 28

கமநல சேவை நிலையத்துக்கு விதை நெல் வரும் எனக் காத்திருந்து ஏமாற்றம் அடைந்த விவசாயிகள் விதைப்புக்கு ஏற்றது எனக் கருதி தனியாரிடமிருந்து நெல்லை வாங்கி விதைத்தனர். ஆனால் அந்த நெல் எதிர்பார்த்த அளவு முளைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து விதை நெல் வந்து சேராதது—

விதை நெல்லுக்குப் பதிலாக தனியாரிடம் வாங்கிய நெல் முழு அளவில் முளைக்கத் தவறியது— ஆகிய காரணங்களினால் பெரும் பாலான விவசாயிகள் விதைப்பைப் பின்போட்டுள்ளனர்.

வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளில் பெரும்பாலான வயல்கள் உழுது பண்படுத்தப்பட்ட நிலையில் சும்மா விடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு காலபோக விதைப்புக்கு 35 ஆயிரம்புசல் நெல்விதை யாழ்ப்பாணத்துக்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (இ10-145-152)

## காலமானார்

பிரபல எழுத்தாளர் சுபைர் இளங்கீரன் அண்மையில் கொழும்பில் காலமானார்.

இவர் ஈழத்தின் முன்னணி நாவலாசிரியரானவர்.

''நீதியே நீ கேள்'' ''இங்கிருந்து எங்கே'' என்ற பிரபல நாவல்களின் ஆசிரியரான இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவர்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர். பல வானொலி நாடகங்களையும் இவர் எழுதியுள்ளார். (அ)

## உடுவில் பகுதி விசேட அ. அட்டை

யாழ்ப்பாணம், செப். 28

உடுவில் வடக்கு (ஜே.186) கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்குவதற்கான புகைப்படம் எடுக்கும் பணி இன்றும் நாளையும் உடுவிலில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட புகைப்பட நிலையத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது (இ-111)

## விசர் நாய்க் கடி

வேலணை கிழக்கில் ஒருவர் விசர் நாயினால் கடியுண்டார்.

க. பொன்னையா (வயது 60) என்ற இந்த நபர் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## நடமாடும் கச்சேரியில் கிடைத்த கசப்பான பதில்

நடமாடும் கச்சேரி வைப்பதால் ஏதும் பயன் உண்டா என்று கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுவிட்டோம்.

ஓர் அன்பரின் மகள் இந்திய இராணுவ காலத்தில் சுடப்பட்டார். இன்னும் நிவாரணம் எதுவும் கொடுக்கப்படவில்லை. நிவாரணம் வழங்காவிட்டாலும் பாதகமில்லை. அது குறித்து ஓர் உத்தியோகத்தர் சொன்ன பதில்தான் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

இது சம்பந்தமாக அரசாங்க அதிபருக்குத் தெரிவித்து விட்டோம் என்றேன்.

அவர் சொன்ன பதில் இதுதான்: ''அந்தக் கடிதம் அப்படியே கிடக்கும், நீங்கள் நேரில் போய்ப்பார்த்தால்தான் உருப்படியாக ஏதும் நடைபெறும்'' — என்றார்.

**வாசகர் திருமுகம்**

ஒரு சாதாரண பிரஜை கடிதம் எழுதினால் அரசாங்கத் திணைக்களத்தில் உள்ளவரின் கடமை என்ன? அதற்கு ஆக வேண்டியதைச் செய்து பதில் தருவதுதானே? பொதுவாக மேசையில் உட்கார்ந்து விட்டால் ஏழையின் குரல் எடுபடுவதில்லை. இது பொதுவாக எல்லா அலுவலகங்களிலும் நடைபெறும் விடயம்.

செய்யுந் தொழிலே தெய்வம் என்பது ஏட்டுச் சுரக்காய் ஆகிவிட்டதா?

சுவாமி சித்ருபானந்தா

பருத்தித்துறை.

## தீவக ஆசிரியர்களின் திரிசங்கு சொர்க்க நிலை

தீவகத்திற்கு திணைக்களங்கள் யாவும் செல்ல முடிவு செய்த பொழுது முதன் முதலில் சென்றவர்கள் ஆசிரியர்களே. ஆசிரியத் தொழில் உயிருடன் சேவையாற்றும் ஒரு தொழில். இதில் கடமையை விட சேவையே முக்கியம். இதனால் தான் அங்குள்ள மாணவர்களின் நிலையை எண்ணி ஆசிரியர்கள் சென்றனர் — தினமும் செல்கின்றனர்.

ஏனைய தொழில் செய்பவர்கள் வாரத்தில் ஒரு நாளோ அல்லது இரண்டு நாள்களோ சென்று தமது கடமையைச் செய்ய முடியும். எம்மை அங்கு செல்லுமாறு கல்விப்பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் பணித்த போது, ''அலுவலர்களுக்கு விசேட பஸ்ஸேவை'' ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் அது பின்பற்றப்படவில்லை. மூடை முடிச்சுகள், கருவாடு. தேங்காய், கொப்பறா, வெற்றுப் போத்தல், ஏனைய சில்லறைச் சாமான்களும் எங்களோடு பிரயாணம் செய்கின்றன, இதனால் தடை முகாம்களில் வீணே காலதாமதம் ஆகின்றது. பொது மக்களைப் பதிவு செய்வதிலும் நேரம் செல்கின்றது. சில சமயங்களில் பஸ் இல்லாமல் காத்து நிற்க வேண்டியுள்ளது. இவையெல்லாம் பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்ட போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆசிரியர்கள் அங்கு இருந்தால் என்ன? என்ற வினாவும் எழத்தான் செய்கின்றது. 6 வருடங்களாகக் கைவிட்ட பிரதேசம்; பற்றைக் காடுகள்; தண்ணீர் இல்லை; தேநீர் குடிக்கத்தானும் கடையில்லை; சொந்த ஊரவர்களே குடியிருக்க அஞ்சுகின்றார்கள்; சீரான போக்கு வரத்து இல்லை; இவ்வாறான நிலையில் ஆசிரியர்களின் அதுவும் ஆசிரியைகளின் பாதுகாப்புக்கு யார் உத்தரவாதம்?

ஓடுகின்ற பஸ்ஸை ஒழுங்காகவும், அலுவலர்களுக்கென தனியாகவும் விடப்பட்டு, இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஒரு தடை முகாமில் மட்டும் சோதனை செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டால் 8.30 க்கு அலுவலர்கள் தமது கடமைக்குச் செல்ல முடியும்.

பிரச்சினைகள் எங்கோ இருக்க, காலை 6.30 க்குப் புறப்பட்டு மாலை 6.30 க்கு வீடு திரும்பும் ஆசிரியர்கள் மீது யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு தமது பிள்ளைகளை பிரபல பாடசாலைகளில் சேர்த்து விட்டு வேண்டாத குற்றச் சாட்டுகளைச் சுமத்துவோர் இனிமேலாவது உண்மை நிலையைப் புரிந்து கொள்வார்களா?

சொர்க்கத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட திரிசங்குவின் நிலையிலேயே ஆசிரியர்கள் இன்று எல்லோராலும் கைவிடப்பட்டுள்ளார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது தொடர் கதைதானா?

பாதிக்கப்பட்ட ஆசிரியன்

பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு

## கென்னத் பெர்னாண்டோ கூறுகிறார்

கொழும்பு, செப். 28 பேச்சுவார்த்தைகள் மூலமாகவே எமது பிரச்சினைகளுக்கு இறுதித் தீர்வைக் காண முடியும். தென்னிலங்கையில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளின் ஆதரவு இன்றி சமாதான முயற்சிகளில் முன்னேற்றத்தைக் காண முடியாது.

அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் அதி.வண. கென்னத் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கிலிக்கன் திருச்சபையின் 111 ஆவது கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போது அதில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

சமாதான யோசனைகளில் இணக்கம் காணத் தவறும் பட்சத்தில் மேலும் அதிக அளவிலான அபாயங்களை எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடும்.

பேச்சுக்களை மேற்கொள்வதன் மூலமே இப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.

தமிழ் மக்களின் தலைவர்களும் விடுதலைப் புலிகளும் போரைக் கைவிட்டு பேச்சுக்களை நடத்த முன்வர வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-3)

## தொழில் நுட்ப தேசிய டிப்ளோமா கற்கை நெறி

### விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், செப். 28 மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் தொழில் நுட்ப தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு 1995 — 96 ஆம் கல்வி ஆண்டுக்குப் புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது பற்றிய விவரம் 16. 8. 96 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

அதன் பிரகாரம் விண்ணப்பங்களை, ஒக்ரோபர் 4 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாய், மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

க. பொ. த. ப.உயர் தர பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனம் ஆகிய பாடங்களில் சித்தி அடைந்தோர் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

எனினும் 1995 ஓகஸ்டில் நடைபெற்ற உயர்தர பரீட்சையில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையிலும் —

அதன் பின்னர் மொரட்டுவ பல்கலைக்கழகம் நடத்தும் தேர்வுப் பரீட்சையில் விண்ணப்பதாரி அடையும் பெறுபேறுகளின் அடிப்படையிலுமே —

கற்கை நெறிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

மாவட்ட கோட்டாமுறையிலேயே மாணவர் தெரிவு நடைபெறும்

இது குறித்த மேலதிக விவரங்களையும், மாதிரிவிண்ணப்பப்படிவத்தையும், யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். (அ)

## இன்று கப்பலில் செல்வோர் விவரம்

கப்பலில் பயணம் செய்ய சிவில் இணைப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் 36 பேர் இன்று கப்பலில் பயணம் செய்ய ஏற்பாடாகி உள்ளது.

இவர்களை இன்று காலை 8 மணிக்கு (புதிய நேரம்) யாழ். மத்திய கல்லூரியில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

36 பேருக்கு மேலதிகமாக அடுத்த பட்டியலில் உள்ள ஒன்பது பேரும் அழைக்கப்பட்டுள்ளனர். எவராவது சமுகமளிக்காதுவிட்டால் இவர்கள் அந்த இடத்தில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அழைக்கப்பட்டோரின் பெயரும், இலக்கமும் வருமாறு:-

2005 — ரி. சின்னையா மற்றும் ஒருவர், 1997 — செல்வி. ரி. ரமணி, 2001 — என். தியாகராஜா மற்றும் ஒருவர்; 3654 — எம். என். சி. றொபேட் மற்றும் ஒருவர், 3103 — திருமதி எம். நாகேஸ்வரி மற்றும் ஒருவர், 2137 — சி. ஜெகன், 2139 — திருமதி எம். மெரீனா மற்றும் ஒருவர், 3094 — ஆர். நிரஞ்ஜன், 1033 — திருமதி. பி குகதாஸ் மற்றும் ஒருவர், 6669 — கே. துரைசிங்கம், 2144 — செல்வி. என். ஜெயசீலி, 2790 — திருமதி. வை. நீலவேணி மற்றும் இருவர்.

2668 — திருமதி. ஜி சரஸ்வதி மற்றும் மூவர், 3167 — செல்வி. எஸ். சுகந்தினி மற்றும் ஒருவர், 1954 — திருமதி ரி. மஞ்சுளமாலா மற்றும் மூவர், 1528 — எஸ் நடேசபிள்ளை, 2921 — திருமதி. சி கதிரவேலு மற்றும் ஒருவர், 2187 — வி. தம்பிராஜா மற்றும் ஒருவர், 2011 — ஆர். யோகராஜா.

அடுத்த பட்டியலில் இருந்து அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

1317 — ஜே. ஞானராசா மற்றும் நால்வர், 1464 — எம் ஜசிந்தன், 2835 — என். தங்கவடிவேல், 2196 — செல்வி. பி சுகந்தினி மற்றும் ஒருவர்.


## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராயில் கிராம முன்னேற்றச்சங்க ஒன்றியம் ஒன்றை 1987 இல் உருவாக்கி, அதன் தலைவராக இருந்த காலப்பகுதில் ஏழை விவசாயிகளுக்கு T.R.R.O. மூலம் அளப்பரிய சேவை செய்து, 15-05-1996 இல் அமரத்துவம் அடைந்த

கவிஞர் செ. ஐயாத்துரை ஆசிரியர்

அவர்களின் மறைவு எமக்கெல்லாம் ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவினால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

கிராம முன்னேற்றச்சங்க ஒன்றியம்,
உரும்பிராய்.

(42888)



மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்


## சலூன்களில்.


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)


களை பொலீஸார் முற்றுகையிட்டு வருகின்றனர்.

வத்தளை பொலீஸ் வட்டாரத்தில் உள்ள 24 சிகையலங்கார நிலையங்களை சோதனையிட்ட பொலீஸார் அங்கு கடமையாற்றிய வடபகுதி வாலிபர்களை விசாரணைக்கு உட்படுத்தினர்.

கொழும்பில் உள்ள சகல சிகையலங்கார நிலையங்களில் பணியுரிவோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (இ-3)

## விமான..


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)


களை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் —

இச்சேவையில் அனுப்பப்படும் தபால்களுக்கு கூடுதல் கட்டணம் அறவிடப்படமாட்டாது என்றும் — யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இந்தச் சேவை மூலம் படையினரதும் மற்றும் அரச, கூட்டுத்தாபனங்களினதும் பொது மக்களினதும் தபால்கள் அனுப்பப்படுல்.

அரச திணைக்கள கடிதங்களின் மேல் திணைக்கள முத்திரையும், திணைக்கள தலைவரின் கையொப்பமும் இருக்கவேண்டும் என்றும்—

கொழும்புக்கு எடுத்துச் செல்லும் தபால்கள் பொலீஸாரால் சோதனை செய்யப்படுவதாகவும்—

தபால்களில் விபூதி, நூல் போன்றவற்றை வைக்க வேண்டாம் என்றும்— யாழ் பிரதம தபால் அதிபர் கேட்டுள்ளார். [இ-3]

## வவுனியாவில்..


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)


களில் இருவர் முஸ்லிம்கள். ஒருவர் தமிழர்.

திருகோணமலையில் பிரபல நகை, இரும்புக்கடை உரிமையாளரான சின்னத்தம்பி விக்கினேஸ்வரராஜா என்பவரே கொல்லப்பட்ட தமிழர் ஆவார்

வன்னிப்பகுதியில் உள்ள தமது குடும்பத்தாரை திருகோணமலைக்குக் கூட்டிச் செல்வதற்காக வவுனியா வந்திருந்த சமயம் இவரது மரணம் இடம் பெற்றது.

மரணமடைந்த மற்றைய இரு முஸ்லிம்களின் விவரம் தெரியவில்லை. (இ-3)

## கிளிநொச்சி அரச அதிபர் கொழும்பு பயணமானார்

### அங்குள்ள நிலை குறித்து பேசுவார்

வவுனியா, செப். 28 யுத்தத்தினால் சின்னாபின்னமடைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட நிலைமை குறித்து அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்காக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். தில்லை நடராஜா கொழும்பு சென்றுள்ளார்.

உபாலி செய்தி நிறுவனத்தின் வவுனியா பிரதம செய்தியாளர் ஜினதாச ரத்துகமகே கிளிநொச்சி அரச அதிபருடன் கலந்துரையாடிப் பெற்ற தகவல்களை பி.பி.ஸி. சிங்களச் சேவையில் நேற்றுத் தெரிவித்தார்.

கிளிநொச்சி நிலைமை குறித்து அரசாங்க அதிபர் பின்வருமாறு கூறியதாகச் செய்தியாளர் ஜினதாச ரத்துகமகே தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் பொது மக்கள் சுமார் 50 ஆயிரம் பேர் வரை தங்கள் வதிவிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களில் சுமார் 40 ஆயிரம் பேர் வரை அக்கராயன் குளம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், ஜெயபுரம் ஆகிய இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

ஏனையோர் மாங்குளம், ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

அவர்கள் தப்பிச்சென்றுள்ள பகுதிகளில் தங்குமிட வசதிகள் (வீடுகள்) இல்லாதபடியால் வீதியோரங்களிலும் காடுகளிலும் தங்கியுள்ளனர்.

அரசிடமிருந்து இதுவரை இம்மக்களுக்கு உணவு மற்றும் உதவிகள் கிடைக்கவில்லை.

உதவி வழங்கும் நிறுவனங்களுக்கும் உணவுப்பொருள்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை.

இந்த அகதிகள் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலேயே தற்காலிகமாகத் தங்கியுள்ளனர்.

அவர்கள் இன்னும்வவுனியா வந்து சேரவில்லை. வவுனியாவிலுள்ள பாதுகாப்பு ஒழுங்குகள் போதுமானதாக இல்லை என அவர்கள் சிந்திக்கக்கூடும் இதனால் அவர்கள் வவுனியா வருவார்கள் என நம்பமுடியாது.

ஷெல் தாக்குதல்களால் 12 பொதுமக்கள் இறந்துள்ளனர். இறந்த பொது மக்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என தப்பிச் செல்லும் மக்கள் தெரிவித்தனர்

இப்படி அவர் தெரிவித்தார். (இ-10)

## நீர்வேலி, குப்பிளானில் மிதிவெடிச் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், செப். 28 நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவங்களில் இருவர் கால் இழந்தனர்.

நீர்வேலியில் நேற்று இடம் பெற்ற சம்பவத்தில் சிவகுமார் சிவரூபன் (வயது .15) என்பவர், வலது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டார்.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக அவர் வசித்து வந்த வளவினுள்ளேயே மிதிவெடி வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு முன் இவரது சகோதரி ஒருவரும் இதே வளவினுள் மிதிவெடியில் சிக்கிக் கால் இழந்தார்.

குப்பிளானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் செல்வராசா செந்தூரன் (வயது 20) என்பவர் இடது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டார்.

புதிதாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றை அமைப்பதற்கு பழைய வீடொன்றில் திருத்த வேலைகளை மேற்கொண்ட வேளையே, வாழைக்கருகில் இருந்த மிதிவெடியில் அவர் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

## அரசு — புலிகள் .


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)


சொன்னார்.

ஆனால் இரண்டு தரப்பாரில் எவருமே இன்னும் மத்தியஸ்தம் குறித்து பிரிட்டனிடம் பிரஸ்தாபிக்கவில்லை —

இராணுவ நடவடிக்கையினால், போரினால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அரசியல் தீர்வே அவசியம் —

இலங்கை அரசுக்கும், எமது நாட்டுக்கும் இடையில் நல்லுறவு நிலவுகிறது அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி அரசியல் தீர்வுக்கு உதவ முடியும் என்று நாம் கருதுகின்றோம் — என்றும் அவர் சொன்னார்.

ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு அரசாங்கத்துடன் அமைதிப் பேச்சைத் தொடங்க விடுதலைப்புலிகள் விரும்பவில்லை. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைக் கானகதவை ஜனாதிபதி சந்திரிகா இன்னும் மூடவில்லை. இராணுவ ரீதியில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என அரசு புரிந்து கொண்டுள்ளது என்று நான் உணர்கின்றேன். இது நல்லபயனளிக்கும் ஆரம்பமாக அமையும் — என்றும் பிரிட்டிஷ் உதவி அமைச்சர் சொன்னார்.

பிரிட்டிஷ் உதவி அமைச்சர் வவுனியாவுக்கு விஜயம் செய்து அகதிகளின் கஷ்டங்கள், அவர்களுக்கான உதவி நடவடிக்கைகள் என்பன குறித்து நேரில் கண்டறிய உள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மல்கம் றிப்கின் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

புலிகளுக்குத் தரகு வேலை பார்ப்பதற்காகவே றிப்கின் கொழும்பு வருவதாகக் கண்டன சுவரொட்டிகள் அப்போது நகரில் ஒட்டப்பட்டிருந்தன.

அவர் நாடு திரும்பும்போது, தமது இலங்கை விஜயம் வெற்றி அளித்ததாகத் தெரிவித்திருந்தார். (அ-3-10)

## மாஹோவில்..


(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)


உணவு ஸ்தாபனம் உதவ முடிவு செய்துள்ளது என்றும் —

அம்பாந்தோட்டை, பொலன்னறுவை மாவட்டங்களில் இருந்து இந்த விதை நெல் கொழும்புக்கு எடுத்து வரப்பட்டுள்ளது என்றும் —

தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் தரித்துள்ள ''மாஹோ'' கப்பலில் இந்த விதை நெல்லை ஏற்றும் வேலைகள் நாளை ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாயிகள் தமக்குத் தேவையான விதை நெல்லைப் பெறுவதற்கு வசதியாகத் தமது தேவைகளை தத்தமது பகுதி கமநலசேவை நிலையங்களில் பதியுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-3)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, இல. [illegible] கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 28-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org